ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இலக்கம் : PS/GPA/ சுற்றறிக்கை/33/2020
2020.10.29

அமைச்சுகளின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்கள் / பொது முகாமையாளர்கள்

**உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்றுநோய் நிலைமையின்போது தொலைவிலிருந்து பணிகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டம்**

1. கொரோனா வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்தும் தேவைப்பாட்டின் கீழ் விசேடமாக மேல் மாகாணத்திற்குள் நடமாற்றத்தை மட்டுப்படுத்தும் நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கவனத்தில்கொண்டு, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் - மே காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த வீட்டிலிருந்து பணியாற்றும் (WFH) காலகட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களைப் பயன்படுத்திக்கொண்டு தொலைவிலிருந்து பணிகளை மேற்கொள்ளும் ஏற்பாடுகளின் கீழ் அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் ஏனைய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக மாற்று வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு மேல் மாகாணத்தில் மற்றும் ஏனைய முக்கிய நகரங்களில் அமைந்துள்ள அரச நிறுவனங்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2. அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொது வழிகாட்டல்களுக்கு அமைவாக நிறுவன-தனித்துவப்பட்ட WFH திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு சகல நிறுவனத் தலைவர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். மக்களின் நலனுக்காகத் தொற்றுநோய் நிலைமையைப் பயனுள்ளவகையில் முகாமைத்துவம் செய்வதற்குரியதாக தமது விடயப் பரப்பெல்லைகளின் கீழ் வருகின்ற சகல செயல்பாடுகளுக்கும் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்குச் சகல நிரல் அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்பதற்கும் பொறுப்பு கூறுவதற்கும் கட்டுப்பட்டுள்ளனர்.

அ. சகல நிறுவன தலைவரும் தொலைவிலிருந்து மேற்கொள்ளக்கூடிய பணிகளின் தன்மை மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றும் ஊழியர்கள் யார் என்பதனைத் தீர்மானிக்க வேண்டியதோடு அதற்குரிய கோவைகள் மற்றும் உபகரணங்களை WFH திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்களின் வீடுகளுக்கு முறையான அனுமதிகளுடன் பெற்றுக்கொடுப்பதற்கான பொறிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டும்.

ගාලු මුවදොර, කොළඹ 01 காலி முகத்திடல், கொழும்பு 01 Galle Face, Colombo 01
දුරකථන தொலைபேசி Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් தொலைநகல் Fax ++ 94 11 2446657
ඊ-තැපැල මின்-அஞ்சல் e-mail prsec@presidentsoffice.lk

ஆ. WFH திட்டத்திற்காக மு.ப. 8.30 இல் இருந்து பி.ப. 4.15 க்கு இடையிலான நேரத்தில் ஊழியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருத்தல் வேண்டும். ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில், வேலை/சேவை என்பவற்றின் தேவைகளின்படி நிறுவனத் தலைவரினால் இது மாற்றப்படலாம்

இ. WFH திட்டத்தின் கீழ் பணியாற்றாத ஊழியர்களை மேலதிக மனிதவளத் தேவைகள் காணப்படும் நிறுவனங்களுக்கு அல்லது செயலணிகளுக்கு மீள் இணைப்புச்செய்யும் அதிகாரம் நிறுவனத் தலைவர்களுக்குண்டு.

ஈ. ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் மாற்றுத் தொடர்பாடல் மூலங்களாக குறுஞ்செய்தி சேவை, மின்னஞ்சல், தொலைபேசி, பாவனையாளர் நேயமிக்க இணையப் பயன்பாடுகளான (Apps) வாட்ஸாப், ஸ்கைப் என்பவற்றை போன்று ஏற்கனவே இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) வினால் அறிமுகப்படுத்தியுள்ள 'Meet' மற்றும் 'Slack' தொடர்பாடல் மூலங்களின் பாவனையை மேம்படுத்த வேண்டும்.

உ. அதேபோன்று குறித்த அதிகாரிகளின் அலுவலகத் தொலைபேசிகளுக்கு வரும் அழைப்புக்களை அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு மாற்றிக்கொள்ளும் வசதிகளைப் பெற்றுக்கொள்ள தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. ஒவ்வொரு ஊழியரும் (பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட) WFH காலப்பகுதியினுள் கடிதங்கள், கோவை குறிப்புகள் மற்றும் மின்னஞ்சல் என்பவற்றின் மூலமாகவன்றி ஏனைய முறைகளினால் பெற்றுக்கொண்ட ஆலோசனைகளை/தீர்மானங்களைப் பதிவுச் செய்வதற்காகக் குறிப்புப் பதிவொன்று (Journal) பேணிச்செல்வது அவசியமாகும். இப் பதிவுகள் நிறுவனத் தலைவரின் உரிய அதிகாரபூர்வ கோவைக் குறிப்புகளாகக் கருதப்படும்.

எ. WFH திட்டத்தை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்காக நிதிச் சட்டம் 135 க்கு அமைவாக வழங்கக்கூடிய அதிகபட்ச அதிகாரங்களை வழங்குவதற்கு சகல கணக்கீட்டு அதிகாரிகள் மற்றும் தலைமை கணக்கீட்டு அதிகாரிகள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

ஏ. பொதுமக்களுக்கு நேரடியாகச் சேவைகளை வழங்கும் ஒவ்வொரு நிறுவனமும் தமது தகவல் உத்தியோகத்தர் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) உதவியுடன் மக்களின் கோரிக்கைகளை/குறைபாடுகளைத் தாமதமின்றி முன்வைப்பதற்காக (ஏற்கனவே இல்லாவிடின்) நிகழ்நிலை மேடையொன்றை (online platform) அமைக்க வேண்டும்.

ஐ. கொரோன வைரஸ் நோய் அறிகுறிகளை உறுதி செய்வதற்காக எவ்வித மருத்துவ சான்றினையும் நிறுவனத்திற்கு வழங்கப்படாத சந்தர்ப்பத்தில், சுய தனிமைப்படுத்தல் வழிகாட்டல்களைப் பின்பற்றும் நபர்களுக்கு வழங்கவேண்டிய பொறுப்புக்களுக்கு

அமைவாக வீட்டிலிருந்து பணியாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனத் தலைவரினால் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படலாம்.

ஒ. இந்த WFH கொள்கை மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் பிற அனைத்து விதிமுறைகள் எவ்வாறு செயல்பட்டாலும், **சிறிதளவிலாவது கொரோனா வைரஸ் அறிகுறிகளைக் கொண்ட எந்தவொரு ஊழியரும் எந்தவொரு பணியையும் மேற்கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு சேவைத் தலத்திலும் எந்நேரமும் முகக் கவசங்களை அணிவதும் மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுவதும் கட்டாயமாகும்.**

03. இந்தச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டுதல்களுக்கு மேலதிகமாக, பின்வரும் குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் கீழ்வரும் துறைகளுக்கு உரித்தாகும்.

**அ. பிரதேச நிர்வாகம்**

i. பிரதேச நிறுவகத்தினுள் மேற்கொள்ளப்படும் பெரும்பான்மையான பணிகள் கள அடிப்படையிலான செயல்பாடுகளுடன் தொடர்புடையது என்பதைக் கருத்தில்கொண்டு, சாதாரண அலுவலக அடிப்படையிலான பணிகளை மேற்கொள்ளும் ஊழியர்களை, WFH காலகட்டத்தில் தேவைப்படும்போது கள அடிப்படையிலான கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு ஒவ்வொரு திணைக்கள / நிறுவன தலைவர்களுக்கு அதிகாரமுண்டு.

**ஆ. கல்வி மற்றும் உயர் கல்வி**

i. பாடசாலை மாணவர்களுக்காகத் தொலைக்காட்சி மற்றும் வானொலி கல்வி அலைவரிசைகளை ஆரம்பிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் பரப்பெல்லையைப் பெறுவதற்காக கல்வி அமைச்சும் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவும் (TRCSL) இணைந்து செயல்பட வேண்டும். அத்துடன், அமைச்சு சகல ஊடகங்களுடனும் ஒன்றிணைந்து பாடசாலை மாணவர்களுக்காக அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட கல்வித் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்குக் குறிப்பிட்ட நேரங்களை ஒதுக்குவதற்குச் செயல்பட வேண்டும்.

ii. பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்மூலம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன், 'டிஜிட்டல் கற்றல் முகாமைத்துவ முறைமைகளை' (DLMS) உருவாக்க கூடியதோடு தொலைதூரக் கல்வித் திட்டங்களையும் செயல்படுத்தலாம்.

## இ. நலன்புரி சேவைகளை வழங்குதல்

i உள்நாட்டலுவல்கள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரினால், அரச சேவைகள் மற்றும் நிதி போன்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்களுடன் ஒன்றிணைந்து, WFH காலப்பகுதியினுள் எந்தவித தடங்கலுமின்றி நலன்புரிச் சேவைகளை வழங்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்த செயல்படவேண்டும். மூத்த பிரஜைகள், காலங்கடந்த சிறுநீரக மற்றும் ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், ஊனமுற்றோர் போன்று வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்குத் தேவையான சேவைகளை அவர்களின் வீடுகளுக்கே வழங்குவதும், கொடுப்பனவுகளை வழங்குவதும் அதேபோன்று முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதும் இதில் உள்ளடங்குகின்றது.

ii. பொதுமக்கள் வாழ்க்கையை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை முகாமைத்துவம் செய்வதற்காக சுகாதார அமைச்சினால் வழிநடத்தல் கையேடுகள், வழிகாட்டல்கள் மற்றும் செயல்முறைமைகள் சில வழங்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சுக்கு ஒட்டுமொத்த அரச சேவையின் உதவியும் ஒத்துழைப்பும் தேவைப்பட்டுள்ளதால் சகல நிறுவனத் தலைவர்களும் தங்களின் கீழுள்ள துறைகள் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக உள்ளதென தொடர்ச்சியான மேற்பார்வைகது உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## ஈ. நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் பொது தொழில்முயற்சியாண்மைகள்

i. பணிப்பாளர் சபை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் வீடியோ மாநாடுகள் மூலம் தமது பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அறிக்கை குறிப்புகள் மென்பொருளாக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக மின்னஞ்சல் மூலம் பரிமாறப்பட வேண்டும்.

## 04. சாதாரணமான நிருவாகம்

i. WFH காலப்பகுதியினுள் சகல நிறுவனங்களினதும் பதவியணி உத்தியோகத்தர்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களினால் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு மேலதிகமாக, தமது நிறுவனத் தலைவரின் முறையான அனுமதியுடன் வேறு எந்தவொரு திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் விசேடமாக அவர்களின் வதிவிடங்களை அண்மித்த பிரதேச நிருவாக நிறுவனமொன்றின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குச் சுயேட்சையாக முன்வரலாம். தனது வதிவிடங்களை அண்மித்த பிரதேசங்களில் நடைபெறும் தனிமைப்படுத்தும் செயல்பாடுகளுக்கு இயன்றளவில் ஒத்துழைப்பு வழங்குமாறு பதவிநிலையற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

ii. வீட்டிலிருந்து பணியாற்றும் (WFH) காலப்பகுதியானது அரச விமுறை நாட்களாக கருதப்படமாட்டாது. அது கொரோனா வைரஸ் நோய் எமது நாட்டில் ஒரு தொற்று நோய் நிலைமைக்கு மாறுவதைத் தடுப்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளதோடு, (WFH) காலப்பகுதியினுள் பொதுமக்கள் வாழ்க்கையைச் சீராகக் கொண்டுசெல்வதற்கான சேவைகளைத் தாமதமின்றி வழங்குவதற்கு நிறுவனத் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

iii. பொதுமக்கள் பாதுகாப்புக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் செயல்பாடுகளுக்கும், அரச ஊழியர்களின் குடும்பங்களுக்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கும், வீட்டிலிருந்து பணியாற்றுதல் மிகவும் உறுதுணையாகவும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

iv. இக் காலப்பகுதியினுள் கூட்டமாக மக்கள் ஒன்றுதிரளும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், தமது நெருங்கியவர்கள் மற்றும் அயலவர்களை இது தொடர்பாக அறிவுறுத்துமாறும் சகல அரச ஊழியர்களிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

v. இந்த அனர்த்த நிலையின்போது அடிக்கடி வழங்கப்படும் மருத்துவ ஆலோசனைகளைக் கடைப்பிடித்து, தமது குடும்பங்களிலுள்ள சிறு பிள்ளைகள் மற்றும் முதியோர் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

vi. அரச சேவைகள் வழங்கப்படும் புதிய வேலைத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் அச்சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் தொடர்பாகவும் வெகுசன ஊடகங்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல் வழிமுறைகள் மூலம் போதுமான அளவு மக்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

vii. ஒவ்வொரு நிறுவனத் தலைவரினால், வீட்டிலிருந்த்து பணியாற்றும் ஏற்பாடுகளினுடாக மேற்கொள்ள வேண்டிய பணிகள், அவற்றுக்காக ஈடுபடுத்த வேண்டிய குறிப்பிட்ட ஊழியர்கள், ஊழியர்கள் கிழமையொன்றுக்கு சேவை நிலையங்களுக்கு சமூகமளிக்கும் தடவைகள், வீட்டிலிருந்து பணியாற்றும் ஊழியர்களை உடனடியாக மீண்டும் சேவை நிலையங்களுக்கு அழைப்பதற்கான வழிமுறைகள் என்பவை தீர்மானிக்கப்படல் வேண்டும். அதன்போது கீழ்வரும் விடயங்கள்மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- எந்த ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்ற வேண்டும், எந்த ஊழியர்கள் சேவை நிலையத்திற்குச் சமூகமளிக்க வேண்டும் மற்றும் ஒரு வாரத்தில் அவர்கள் சமூகமளிக்க வேண்டிய தடவைகள் என்பவற்றை தீர்மானிக்க வேண்டும்.

- பொதுப் போக்குவரத்து தொகுதியில் மற்றும் சேவை நிலையங்களில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகச் சேவை நிலையங்களுக்குச் சமூகமளிக்கத் தேவையான ஊழியர்களின் சாதாரண சேவை நேரத்தை இரு தவணைகளாகப் பிரித்து வழங்குவதற்கான வழிமுறைகளை ஆராய்தல்.

- ஊழியர்கள் தமது பணிகளை மேற்கொள்வதற்காக நிகழ்நிலை **(online)** முறைமைகளை தொடர்ச்சியாகக் கையாளுதல்.

- வீட்டிலிருந்து பணியாற்றும்போது நிறைவு செய்யவேண்டிய சகல பணிகளுக்கும் நாளாந்த இலக்குகளை வழங்குதல்.

- மேற்கொள்ளக்கூடிய சகல பணிகளையும் குறிப்பிட்ட கால எல்லைகளுடனான ஒப்படைப்புகளாக மாற்றுதல்.

- வீட்டிலிருந்து பணியாற்றுவதில் ஈடுபட்டுள்ள சகல ஊழியர்களின் அழைப்பு நாட்குறிப்பு போன்று நாளாந்தம் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான அறிக்கையொன்றினையும் கட்டாயமாக பேணிச்செல்லுதல் வேண்டும்.

## 05. அலுவலகத்தினுள் நோய் தடுப்பு நடவடிக்கைகள்

சகல நிறுவன தலைவர்களினால் சேவை நிலையங்களில் கொவிட் - 19 பரவுதலைத் தடுப்பதற்காகத் தேவையான சகல சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கடைபிடித்தல் வேண்டும்.

அ. நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களும் சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல் மற்றும் ஏனைய சகல விதிமுறைகளையும் தீவிரமாகக் கடைபிடித்தல் வேண்டும்.

ஆ. சகல சேவை நிலையங்களையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணிக்காக்க வேண்டியதோடு விசேடமாக பொது இடங்கள், கவுண்டர், வேலைத்தலங்கள், உணவு மற்றும் தேநீர் அருந்தும் அறைகள், சிற்றுண்டிச் சாலைகள், கழிவறைகள் மற்றும் ஏனைய பொதுப் பாவனைக்கான இடங்களை எப்பொழுதும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேண வேண்டும்.

இ. விசேடமாக, பொதுமக்கள் அனேகமாக வந்துசெல்லும் சேவைநிலையங்களில் சவர்க்காரம் மற்றும் தண்ணீர் உபயோகித்து அல்லது/மற்றும் சுத்திகரிப்புத் திரவங்களை உபயோகித்து கைகளைச் சுத்திகரிப்பதற்கான வசதிகளை நன்றாக காணக்கூடிய மற்றும் இலகுவாக அணுகக்கூடிய இடங்களில் வழங்குதல்.

ஈ. கடைபிடிக்கவேண்டிய சுகாதார மற்றும் சுத்திகரிப்பு வழிகாட்டல்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தும் அறிவித்தல்களை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக நிறுவனங்களில் நன்றாக்க் காணக்கூடியதாகக் காட்சிப்படுத்தல்.

உ. முக்கியமான நபர்களின் பங்களிப்பில் மாத்திரம் கூட்டங்களை நடத்துதல் அல்லது குறைந்த எண்ணிக்கையிலான நபர்களை பங்குபற்றச் செய்து நடத்தப்படும் கூட்டங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

ஊ. அத்தியாவசியமற்ற அலுவலகப் பயணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அத்தியாவசிய அலுவலகப் பயணங்களை மேற்கொள்ள நேரிடும் உத்தியோகத்தர்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களின் விதிமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

எ. சேவை நிலையங்களில் நடத்தப்படும் சகல அலுவலக ஊழியர்களும் பங்குபற்றும் கூட்டங்களில் கலந்து கொள்பவர்களின் மற்றும் பல்வேறு சேவைகள் வழங்கும் நபர்களின் பெயர் மற்றும் தொடர்பு எண்கள் பேணிக்காக்கப்பட வேண்டும்.

ஏ. சுகாதார தர நியமங்களைக் கடைபிடித்தல் தொடர்பாக '**முன்மாதிரி வளாகமாக**' ஆக ஒவ்வொரு சேவை நிலையமும் மக்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்.

**06. கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்போது மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்கும் திட்டம்**

அ. கொழும்பு, கம்பஹா, களுத்தறை எனும் மாவட்டங்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைகளுக்கிணங்க அச்சுறுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அரசாங்க அலுவலகங்கள் தமது பணிகளை ஆரம்பத்தில் முனைப்பு அடிப்படையில் சேவைக்கு சமூகமளிக்கும் குறைந்த ஊழியர்களின் பங்களிப்பில் செயல்படுத்த வேண்டும். ஊழியர்களைத் தெரிவு செய்வதற்குப் பொருத்தமான அளவுகோல்களை நிறுவனத் தலைவர் உபயோகப்படுத்தலாம்.

ஆ. கொழும்பு, கம்பஹா, களுத்தறை மாவட்டங்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைகளுக்கிணங்க அச்சுறுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் அமைந்துள்ள அரசாங்க அலுவலகங்கள் சுகாதார ஒழுங்குவிதிகளைக் கடுமையாகக் கடைப்பித்து வழமையான முறையில் வலுவாகப் பணிகளை முன்கொண்டுசெல்ல வேண்டும்.

இ. ஊழியர்களில் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் சமூகமளிக்காவிட்டாலும் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

ஈ. நிறுவனத் தலைவர்களினால் தமது அலுவலகங்களில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காகப் பல்வகையான மக்கள் சேவைகளை வழங்குவதற்காக நாட்களை மற்றும் நேரங்களை குறிப்பிடலாம். அவ்வாறான பொறிமுறை தொடர்பாக வெகுசன ஊடகங்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல் வழிமுறைகள் மூலம் போதுமான அளவு மக்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

**07. விசேட கவனத்திற்கு**

i. சனாதிபதியின் செயலாளரின் 2020.03.30 ஆம் திகதிய மற்றும் பிஎஸ்/சிஎஸ்ஏ/சுற்றறிக்கை/18/2020 இலக்க சுற்றறிக்கையின் (2A) பந்தியின் மீது கவனம் ஈர்க்கப்படுகின்றது. ஒவொரு நிறுவனத் தலைவரினாலும் தொகுதிகளை மீளுருவாக்கம் செய்வதற்காக (செயல்முறைகளை இலகுவாக்குவதற்காக) ஊழியர்களினால் வழங்கப்படும் முன்மொழிவுகளைக் கவனத்தில் கொள்ளுதல் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதற்காக உரிய நிரல் அமைச்சின் செயலாளரின் அனுமதியினைக் கோருதல் தொடர்பாகக் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.

ii. "கொவிட் - 19 வைரஸ் செயற்படும் கலப்பகுதியினுள் வழமையான அன்றாட நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக மாவட்டங்களைத் திறக்கும்போது அரச நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டல்கள்" என்னு தலைப்பில் சனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட PS/GPA/சுற்றறிக்கை/20/2020 இலக்க மற்றும் 2020.04.18 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயல்படுவது எதிர்பார்க்கப் படுகின்றது.

iii. தங்களின் கீழுள்ள ஊழியர்களை அவ் விசேட வழிகாட்டல்கள் தொடர்பாக அறிவுறுத்துமாறு சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**08. அத்தியாவசிய சேவைகள்**

துறைமுகங்கள் மற்றும் அவை சார்ந்த நடவடிக்கைகள், சுங்கம், நீர் மற்றும் மின்சாரம் போன்ற சேவைகள் என்பன நோய் தடுப்பு கட்டுப்பாடுகளினால் தடைகளின்றி மேற்கொள்ள வேண்டியதனால் அவை அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படுவதுடன் சகல நிறுவனத் தலைவர்களும் அப் பணிகளை நடத்திச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒப்பம்.:. **பி. பீ ஜயசுந்தர**
***சனாதிபதியின் செயலாளர்***

பிரதிகள் : தலைவர், பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்கான சனாதிபதி செயலணி
அமைச்சரவையின் செயலாளர்
பிரதமரின் செயலாளர்
சுயாதீன ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
கணக்காய்வாளர் நாயகம்
கொவிட் - 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு நிலையத்தின் தலைவர்